
# தரம் 12

# முதலாம் தவணை



## தமிழ்

## சங்கச்செய்யுள்

**Mrs. S.Kanagambal (BA)**

**CP/K/Sri Ramakrishna National College, Galaha.**

# குறுந்தொகை 226

பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல் வனப்பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉம் நுதலும் நன்றும்
நல்லமன் வாழி தோழி யல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே

# பல்தேர்வு வினா

மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து. அதன் விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. இச்செய்யுள் இடம்பெற்ற காலம் யாது?

1) சங்கமருவிய காலம் 2) சங்ககாலம்

3) பல்லவர் காலம் 4) சோழர் காலம்

( )

விடை – சங்ககாலம்

2. இச் செய்யுள் இடம் பெற்ற திணை

1) முல்லை
2) மருதம்
3) நெய்தல்
4) பாலை (……)

விடை - நெய்தல்

3. வேய் என்பதன் ஒத்தக்கருத்துச் சொல்

அ) மூங்கில்

ஆ) குழந்தை

இ) கரும்பு

ஈ) தலைவி (……)

விடை - மூங்கில்

4. பூவொடு புரையும் என்பது

அ) உருவகம்

ஆ) உவமை

இ) தற்குறிப்பேற்றம்

ஈ) சிலேடை (……)

விடை - உவமை

5. இச்செய்யுள் உணர்த்தும் காதல் ஒழுக்கம்

அ) புணர்தல் ஆ) ஊடல்

இ) இருத்தல் ஈ) இரங்கல் (…..)

விடை – இரங்கல்

6. இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள உவமை அணிகளின் எண்ணிக்கை

அ) 3

ஆ) 4

இ) 2

ஈ) 5 (…..)

விடை – நான்கு (4)

7. பிறையென மதி மயக்குறூஉம் நுதல் என்பதன் பொருள்

அ) பிறைபோல தோன்றி மதியை மயங்கச் செய்யும் கண்

ஆ) பிறை போல தோன்றி மதி எனும் தலைவியை மயங்கச் செய்தல்

இ) பிறையை மயக்கச் செய்யும் நெற்றி

ஈ) பிறைபோல தோன்றி மதியை மயங்கச் செய்யும் நெற்றி

(……)

விடை – பிறைபோல தோன்றி மதியை மயக்கச் செய்யும் நெற்றி

8. சேர்ப்பன் எனப்படுபவன்

அ) நெய்தல் நிலத் தலைவன்

ஆ) மருத நிலத் தலைவன்

இ) குறிஞ்சி நிலத் தலைவன்

ஈ) பாலை நிலத் தலைவன்

(…..)

விடை – நெய்தல் நிலத் தலைவன்

9. பாடலில் காணப்படும் நெய்தல் நிலச் சிறப்பாக அமையப்பெறாதது

அ) நாரைகள் மீன்களை கொத்துகின்றமை

ஆ) அலைகளையுடைய அகன்ற நீர்ப்பரப்பை உடையது

இ) தயங்கு திரை தாழை வெண்பூக்கள் கொண்டது

ஈ) தாழம் பூக்கள் குருகு என மலர்ந்திருத்தல்

(….)

விடை – நாரைகள் மீன்களை கொத்துகின்றமை

10. நெய்தல் நிலம் எனப்படுவது

அ) காடு சார்ந்தவை

ஆ) மலை சார்ந்தவை

இ) வயல் சார்ந்தவை

ஈ) கடல் சார்ந்தவை

(….)

விடை – கடல் சார்ந்தவை

11. தலைவியின் அழகு நலன்களாக பாடலில் குறிப்பிடப்படாதது

அ) மலர் போல கண்கள் காணப்படுகின்றமை.

ஆ) அறிவை மயங்கச் செய்யும் பிறை போன்ற நெற்றி

இ) மூங்கில் போன்ற வனப்பெய்திய தோள்

ஈ) கார்மேகம் போன்ற கருங்கூந்தல்

(….)

விடை – கார்மேகம் போன்ற கருங்கூந்தல்

12. பெருந்துறை என்பதற்கு பொருத்தமில்லாத கருத்தாக அமைவது

1. பெரியதுறை
2. அகன்ற துறை
3. பரந்த துறை
4. குறுகிய துறை

விடை – குறுகிய துறை

13. அல்கல் என்பதன் எதிர்ப்பதம்

1. பகல்
2. இரவு
3. கங்குல்
4. துன்பம்

விடை – பகல்

14. பூவொடு புரையும்... எனத் தொடங்கும் செய்யுள் புலப்படுத்தும் விடயமாக அமைவது

1. தலைவனிடத்து கொண்ட வெறுப்பு
2. பருவங்கண்டு இரங்கல்
3. தலைவனின் பிரிவுத்துயர்
4. தலைவியின் பிரிவுத்துயர்

விடை – தலைவியின் பிரிவுத்துயர்





பின்வருவனவற்றுள் நெய்தல் நிலத் தோற்றம்





விடை –



# தொடர்பு படுத்துக.

## பின்வருவன எவ்வெப் பொருளில் வருகிறது என்பதை இணைக்குக.

- 1. விறல் வனப்பு
- 2. சேர்ப்பன்
- 3. தயங்கல்
- 4. நகுதல்
- 5. வேய்

- சிரித்தல்
- மூங்கில்
- ஒளி செய்தல்
- வெற்றிக் கொள்ளும் அழகு
- நெய்தல் நிலத் தலைவன்

# விடை

1. விறல் வனப்பு
2. சேர்ப்பன்
3. தயங்கல்
4. நகுதல்
5. வேய்

- சிரித்தல்
- மூங்கில்
- ஒளி செய்தல்
- வெற்றிக் கொள்ளும் அழகு
- நெய்தல் நிலத் தலைவன்

# இடைவெளி நிரப்புக.

மிகப் பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

1. பூவொடு புரையும் என்ற செய்யுளை ........................................................................ பாடினார்.

விடை – மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார்

2. அகன்ற நீர்ப்பரப்பை உடையது

...................................... என சிறப்பிக்கப்பட்டது.

விடை - விரிநீர்

3. நெய்தல் நிலத் தலைவன் …………………….. எனப்படுவான்.

விடை - சேர்ப்பன்

4. இப்பாடல் ............... பாவால் பாடப்பட்டுள்ளது.

விடை - அகவல்

5. “தயங்குதிரை பொருத தாழை வெண்பூக் குருகென மலரும் பெருந்துறை” எனும் தொடரில் ………… உவமைக்குறிப்பு பயன்படுத்தப்பட்டது.

விடை - உள்ளுறை

சரியாயின் சரி (✔) எனவும் பிழையாயின் பிழை (✖) எனவும் அடையாளமிடுக.

1. தலைவனை பிரிந்ததால் தான் மேலும் அழகாக இருப்பதாக தலைவி எண்ணுகிறாள். ( )

**விடை – பிழை (✖)**

2. அல்கலும் தயங்குதிரை பொருத தாழை வெண்பூ என்பதன் மூலம் தலைவி இரவுதோறும் விரக வேதனையால் அலைக்கழிக்கப்படுவது குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது ( )

**விடை – சரி (✓)**

3. பிரிவுத்துயரை தாங்காள் என கவலையுற்ற தலைவிக்கு தோழி கூறியது.

( )

**விடை – பிழை (✖)**

4. தன் துயரத்தை தோழிக்கு கூறுவதன் மூலமாகவும் தன் துயர் பகிர்தலை மேற்கொள்கிறாள். ( )

**விடை – சரி (✓)**

5. இரவுதோறும் அலைகளால் மோதப்பட்ட தாழைப்பூ நாரையை போல காணப்படுகிறது. (   )

**விடை – சரி (✓)**

## பின்வரும் சொற்களுக்கு பொருள் எழுதுக.

- 1. வேய் -
- 2. விறல் -
- 3. விறல் வனப்பு -
- 4. அல்கல் -
- 5. சேர்ப்பன் -

- 1. மூங்கில்
- 2. வெற்றி
- 3. வெற்றி கொள்ளும் அழகு
- 4. இரவு
- 5. நெய்தல் நிலத் தலைவன்

# பின்வரும் சொற்களுக்கு பொருள் எழுதுக.

- 6. குருகு –
- 7. தயங்கு –
- 8. நுதல் -
- 9. நகாஅ ஊங்கே –
- 10. புரையும் -

- 6. நாரை
- 7. விளங்கும்
- 8. நெற்றி
- 9. கூடி மகிழ்வதற்கு முன்
- 10. போலவும்

பின்வரும் பாடல் வரிகளை கொண்டு கூட்டி எழுதுக.

1. பூவொடு புரையும் கண்ணும் வேயென

……………………………………………………………..

விடை – பூவொடு புரையும் கண்ணும் வேய் என

2. விறல் வனப்பெய்திய தோளும்

…………………………………………………………

விடை – விறல் வனப்பு எய்திய தோளும்

3. மதிமயக் குறூஉம் நுதலு நன்றும்

……………………………………………………………

விடை – மதி மயக்குறூஉம் நுதலும் நன்றும்

4. விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே

……………………………………………………………………..

விடை – விரி நீர்ச் சேர்ப்பனொடு நகாஅ ஊங்கே

5. தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்

……………………………………………………………….…

விடை- தயங்கு திரை பொருத தாழை வெண்பூ

# சுருக்கமான விடைத் தருக.

1. பூவொடு புரையும் என்ற செய்யுளை எழுதியவர் யார்?

விடை – மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார்

2. பாடலில் காணப்படும் அணி யாது?

விடை – உவமை அணி

3. பூவொடு புரையும் என்ற செய்யுளின் துறையை குறிப்பிடுக.

விடை – வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைவி உரைத்தது.

4. இச்செய்யுள் குறுந்தொகையில் எத்தனையாவது பாடலாகும்?

விடை – 226 வது பாடல்

5. நெய்தல் நிலத் தலைவன் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறான்?

விடை –

விரிநீர்ச் சேர்ப்பான் (அகன்ற நீர்ப்பரப்பினையுடைய தலைவன்)

# நன்றி

